**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி**
**OS.93/2015. நாள்.19.12.2024**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. நசீம் பேகம் அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | வெங்கடேஷ் | **வயது** | 40 |
| **த/பெ. க/பெ.** | வேடியப்பன் | **மதம்** | |
| **முகவரி** | | **தொழில்** | உதவி பொறியாளர் பாசனப்பிரிவு நீர்வளத்துறை, பாரூர் |

**<u>பி..சா.1 ஆஜர். முதல் விசாரணை :</u>**

நான் இவ்வழக்கில் 2-ம் பிரதிவாதி ஆவேன். எனது தரப்பில் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயாரிக்கப்பட்டது ஆகும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது ஆகும். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. 14.01.2011 தேதியிட்ட அரசாணை (நிலை) எண்.19 பொதுப்பணி (W1) துறை நகல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. Technical Sanction RR No. 47CE/CR/2010-11 Condensed Estimate and plans Page No.97 உண்மை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 29.10.2013 தேதிய கூட்டுபுலதணிக்கை அறிக்கை வரைப்படத்துடன் உண்மை நகல் பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 15.09.2015 தேதிய Land Plan Schedule பக்கம்.251 முதல் 253 வரை உண்மை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5.08.08.2015 தேதிய வருவாய் துறை மூலம் பெறப்பட்ட வரைப்படம் உண்மை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) பி.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 08.08.2015 தேதிய வருவாய் துறை மூலம் பெறப்பட்ட அறிக்கை உண்மை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) பி.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7.06.08.2020 தேதிய அரசாணை (நிலை) எண்.411 வருவாய் மற்றும் பேரிடர் மேலான்மை துறை நில நிர்வாகம் (A) பிரிவு, நாள் 06.08.2020 நகல் பி.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8.20.02.2023 தேதிய அரசாணை (நிலை) எண்.5 நீர்வள (எண்.1) துறை நாள்.20.02.2023 நகல் பி.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9.05.09.2023 தேதிய மாவட்ட அளவிலான தணிகை நேரடி பேச்சுவார்த்தை கூட்ட அறிக்கை உண்மை நகல் பி.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10.07.10.2023 தேதிய மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ஆணையின் உண்மை நகல் பி.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பி.சா.ஆ.3 ஆவணம் உண்மை நகல் என்பதால் வாதி தரப்பில் குறியீடு ஆட்சேபனை
செய்யப்பட்டது. ஆட்சேபனையின் அடிப்படையில் மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்பட்டது.

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

தாவா சொத்து விவரங்கள் எனக்கு தெரியும். தாவா சொத்தை ஒட்டி எவ்வளவு நீள, அகலத்திற்க்கு கால்வாய் வெட்டப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியும். கால்வாய் அமைப்பதற்க்கான ஒப்பந்தம் எப்போது போடப்பட்டது என்றால் அரசாணை எண்.19–ன் அடிப்படையில் 14.01.2011 ஆம் வருடம் அனுமதி கொடுத்த பிறகு 10.05.2012 ஆம் தேதி பணி தொடங்கியது. 04.01.2014 வருடம் பணி முடிக்கப்பட்டது. எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 12.5 கி.மீ நீளத்திற்க்கு கால்வாய் அமைக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ள நிலையில் அந்த கால்வாயனது எந்த சர்வே எண்ணில் ஆரம்பிக்கப்பட்டு எந்தெந்த சர்வே எண் வழியாக சென்று எந்த சர்வே எண்ணில் முடிகிறது குறித்து ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் முழு நீளத்திற்க்கும் ஆவணம் கொடுக்கவில்லை. வழக்கு தாவா சொத்து அமைந்துள்ள கிராமத்தில் செல்லும் கால்வாய் விவரங்கள் அமைக்கப்பட்டது குறித்து அனைத்து விவரமும் அளித்துள்ளோம். தாவா சொத்தை ஒட்டி கால்வாய் எப்போது அமைக்கப்பட்டது என்று சொன்னால் தாவா சொத்தை ஒட்டி எந்த நாளில் குறிப்பிட்டு கால்வாய் அமைத்தார்கள் என்று என்னால் சொல்ல இயலாது. வாதி சத்தியநாராயனன்

தனது நிலத்தை கால்வாய் அமைப்பதற்க்காக ஆர்ஜிதம் செய்வதற்க்கு ஆட்சேபனை தெரிவித்து பலமுறை கடிதம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 18.04.2013 ஆம் தேதி மனுதாரர் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணமானது எங்கள் அலுவலகத்தில் இருந்து வழங்கப்பட்டதா என்று என்னால் சொல்ல இயலாது. வா.சா.ஆ.3 ஆவணமானது தகவல் உரிமைச்சட்டத்தில் எங்கள் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்டு அதில் மனுதாரர் ஒப்புக்கொண்ட பாதையின் வழியே கால்வாய் அமைக்கப்பட்டுவிட்டது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது என்று கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் இந்த அறிக்கை பற்றி எனக்கு தெரியாது. எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தெரிந்து வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்த ஆவணங்களை மட்டும் தான் நாள் பரிசீலனை செய்து தாக்கல் செய்துள்ளேன். அசல் வழக்கு விவரம் எனக்கு தெரியும். வா.சா.ஆ.3 ஆவணம் வாதியால் தாக்கப்பட்டுள்ளது எனக்கு தெரியுமா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் எனக்கு தெரியாத காரணத்தால் நான் தாக்கல் செய்துள்ள சாட்சியம் சாட்சிய சம்மந்தமற்றது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.7 ஆவணம் யாரால் சான்றிடப்பட்டது என்று சொன்னால் உதவி செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை நீர்வள ஆதாரம் என்பவரால் சான்றிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் மனுதாரர் கோரியுள்ள இடத்தில் கால்வாய் வெட்ட உரிய நில அளவையரை கொண்டு நில அளவை செய்து வரைப்படத்தில் உள்ளப்படி கால்வாய் அமைக்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. 28.05.2013 ஆம் தேதியில் கால்வாய் அமைக்கப்பட்டுவிட்டது என்றும் 24.10.2013 ஆம் தேதியில் வரைப்படத்தில் உள்ளப்படி கால்வாய் அமைக்கப்படும் என்று முரண்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வழக்கு விவரமும் மேற்படி ஆவண விவரமும் எனக்கு நன்கு தெரியும் என்றும், முரண்பட்ட விவரம் என்பதால் தெரியாது என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 29.10.2013 ஆம் தேதிய கூட்டுபுல தணிக்கை அறிக்கை எதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது என்றால்

வருவாய் துறை அழைத்ததின் பெயரில் தணிக்கை மேற்கொள்ள சென்றோம். கூட்டுபுல தணிக்கை செய்ய வருவாய் துறை அனுப்பிய கடிதம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. ஆட்சேபனை தாரர் இருந்தால் அவருக்கும் அறிவிப்பு கொடுத்து அவர் முன்னிலையில் அளவை மேற்கொள்ளப்பட்டு அவரிடம் ஒப்பம் பெறவேண்டும் என்று சொன்னால் வருவாய் துறையினர் நில ஆர்ஜிதம் செய்ததால் அவர்கள் தான் ஆட்சேபனைதாரருக்கு அறிவிப்பு அனுப்ப வேண்டும். தணிக்கை அறிக்கை குறித்து ஆட்சேபனைதாரருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால் அது வருவாய் துறையின் வேலையாகும். இவ்வழக்கின் வாதி எங்கள் துறைக்கும் ஆட்சேபனை கடிதம் அனுப்பினார் என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் இருந்து தணிக்கை செய்து அறிக்கை வழங்கினோமா என்றால் அதுப்பற்றிய விவரம் எனக்கு தெரியாது. என்னுடைய முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் வாதிகள் அனுப்பிய அறிவிப்புக்கும், ஏற்கனவே புதிய கால்வாய்க்கான பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு கால்வாய் பயன்பாட்டிற்க்கு வந்துவிட்டதாக பதிலும் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த பதிலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தனிப்பட்ட முறையில் எங்கள் அலுவலகத்தில் இருந்து பதில் அனுப்பப்பட்டதா என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது. 15.09.2023 தேதி தனியர் நேரடி பேச்சுவார்த்தை குழு கூட்டம் நடந்ததாக முதல் விசாரணையில் கூறியுள்ள நிலையில் அதைப்பொருத்து வாதிக்கு எதாவது அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் மாவட்ட ஆட்சியர் தான் பேச்சுவார்த்தை நடத்தினார் வருவாய் துறையினர் தான் தகவல் கொடுக்கவேண்டும் கொடுத்தார்களா என்று எனக்கு தெரியவில்லை. முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி கூட்டத்தில் கலந்துகொள்ள வாதிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது என்று நான் கூறியுள்ள நிலையில் அதை எவ்வாறு கூறினேன் என்று சொன்னால் வருவாய் துறையினரை விசாரணை செய்ததால் அந்த தகவலை தெரிவித்துள்ளேன். வருவாய் துறையினரிடம் வாதிக்கு அறிவிப்பு கொடுத்ததற்க்கான சார்வு நகலை நான் கேட்டு வாங்கவில்லை. நான் விசாரித்திருந்தால் சார்பு நகலை பெற்றிருப்பேன் என்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும் அவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளாத காரணத்தால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்தகூட்டத்தில் 1–ம்

வாதி கலந்து கொண்டாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. ஆனால் எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் வாதிகள் மேற்படி கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்று எவ்வாறு கூறினேன் என்று சொன்னால் வருவாய் துறை கூறியதை அவ்வாறு தெரிவித்துள்ளேன். வாதிகள் நிலத்தில் சர்வே எண்.512/ஏ 2–வில் எந்த பகுதியில் என்ன விஸ்தீரணத்திற்க்கு நிலம் எடுக்கப்பட்டது என்று சொன்னால் வடக்கில் இருந்து தெற்க்காக, வீரமலை கூட்ரோடு சாலையை ஒட்டி புல எண்.512/ஏ 2–வில் , மீண்டும் கிழக்கு பக்கமாக திரும்பி செல்லுகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது. விஸ்தீரணம் 0.02.00 எக்டர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி விவரத்தை தான் பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ளேன். பாரா எண்.5 ன் படி மேற்படி விவரத்தை கூறுகிறேன் என்றால் சரிதான். மேற்படி சங்கதியின் படி கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆர்ஜிதம் குறித்து குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வடக்கு தெற்க்காக எவ்வளவு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. தெற்கில் இருந்து கிழக்காக எவ்வளவு நில் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்ற விவரமும் எனக்கு தெரியாது. நிலம் ஆர்ஜிதபடுத்தப்பட்ட பகுதியில் கால்வாய் அமைக்கும் நிர்வாகம் எங்கள் அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் வருவாய் துறை மற்றும் பொதுப்பணி துறை 2 அலுவலகமும் சேர்ந்து தான் மேற்படி பணியை மேற்கொள்வோம். எவ்வளவு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்று என்னால் முறையாக சொல்ல முடியாத நிலையில் முறையாக கால்வாய் அமைக்கப்பட்டிருக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. நிலத்தை ஆர்ஜிதம் செய்ய போவதையும், ஆர்ஜிதம் செய்ததையும் ஆர்ஜிதத்திற்க்கான மதிப்பீட்டையும் நாளிதழில் அரசாணையாக வெளியீடப்பட வேண்டும் என்று சொன்னால் அது வருவாய் துறையின் பணியாகும். அந்த நடவடிக்கைகளை பின்பற்றினார்களா என்று வருவாய் துறைக்கு தான் தெரியும். நிலம் ஆர்ஜிதம் செய்தது தொடர்பாக எவ்வளவு தொகை இழப்பீடாக ஒதுக்கப்பட்டது என்று வருவாய் துறைக்கு தான் தெரியும். முதல் விசாரணையில் இழப்பீட்டு தொகையாக ரூ.7,12,250/– நிர்ணயம் செய்யப்பட்டது. வருவாய் துறை கூறியதின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன். ஆட்சேபனைதாரர் கால்வாய் அமைப்பது குறித்து ஆட்சேபனை

செய்யும் பட்சத்தில் உரிய நிர்வாகத்திற்க்கு தெரியபடுத்தி நிவர்த்தி செய்த பின்னிட்டு தான் கால்வாய் அமைக்கும் பணி மேற்கொள்ள வேண்டும் என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. புதிய கால்வாய் அமைப்பதற்க்காக கையகப்படுத்தப்பட்ட பகுதியில் கால்வாய் அமைக்கப்பட்டுள்ளதா என்றால் அமைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே வெட்டப்பட்ட கால்வாய்க்கான உண்டான நில மதிப்பீடு அரசாணை தான் அதுவாகும். முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் பாரா 6–ல் புதிய கால்வாய் அமைக்கும் பணிக்காக என்று குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் அரசாணைக்காக அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. என்னுடைய முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் பாரா 7–ல் பிரதிவாதிகள் புதிய கால்வாய் அமைக்கும் பணியை முழுவதுமாக அரசு உத்தரவின் பெயரில் முடித்து கால்வாய் பயன்பாட்டில் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். வாதிக்கு பாத்தியப்பட்ட இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்க்கு வழங்கப்பட்ட தொகை ரூ.7,12,250/– பொருத்து என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றால் வருவாய் துறைக்கு தான் அது தெரியும். அந்த நிலத்தில் உள்ள மரத்திற்க்கு எவ்வளவு இழப்பீடு நிர்ணயம் செய்யப்பட்டது என்றால் அதை வருவாய் துறையும், தோட்டக்கலை துறையும் சேர்ந்து முடிவு செய்வார்கள். எவ்வளவு தொகை ஆர்ஜித நிலத்திற்க்கு கொடுப்பதற்க்கு தயாராக உள்ளது என்று சொன்னால் அது வருவாய் துறைக்கு தான் தெரியும். இந்த வழக்கில் வருவாய் துறையை சாட்சியாக விசாரிக்க உள்ளோமா என்றால் அதுப்பற்றி தெரியாது. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற ஆணையரின் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சர்வே எண்.512/ஏ 2–வில் தெற்க்கு பக்கம் மேற்கு கிழக்கு எல்லையில் ஒரு பக்கம் மட்டும் சுமார் 6 அடி நீளத்திற்க்கு 1 அடி அகலத்தில்

ஆக்கிரமிப்பு செல்கிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எங்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதியை அகற்றி கொள்ள வேண்டும் என்றும், வாதிகளின் நிலத்தில் அத்துமீறி கால்வாய் அமைக்கப்படகூடாது என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நிர்ணயிக்கப்பட்ட வழித்தடத்தை மாற்றி வாதியின் நிலத்தில் கால்வாய் அமைத்ததால் அவருக்கு உண்டான செலவுதொகையுடன் வழக்கு பரிகாரம் கிடைக்குதக்கது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN

District Munsif cum
Judicial Magistrate
Digitally signed by
SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.